**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி. P. கனிமொழி , L. L. M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ம் நாள் செவ்வாய்க் கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் சித்திரை மாதம் 15 ம் நாள்

**TNMY09-003628-2021**

**OS.No.110/2021**

S. செல்வராஜ்பிள்ளை .....வாதி

//எதிர்//

A. சொக்கலிங்கம் .....பிரதிவாதி

இவ்வழக்கானது 20.06.2017ம் தேதி O.S.No.149/2017 என சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 18.11.2021 அன்று O.S.No.110/2021 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, 27.04.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. V. சாந்தி மற்றும் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வேணுகோபாலன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையான தாவா தொகை ரூ.66,000/–த்தை பின்வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.28 17:47:48 +0530

<u>வழக்குரையின் சுருக்கம்</u>:–

2. இவ்வழக்கு பிரதிவாதி வாதிக்கு சொந்தமான "ஆனந்தி டீலக்ஸ்" தியேட்டரில் மேனேஜராக பணிபுரிந்து தற்போது விலகிவிட்டார். மேற்படி பிரதிவாதி பணியிலிருந்தபோது அவரது குடும்ப செலவிற்காக வாதியிடம் ரூ.90,000/– (ரூபாய் தொண்ணூறு ஆயிரம்) கடனாக பெற்றுகொண்டு அதற்கு ஆதரவாக 02.05.2012ல் ஒரு ஆவணமும் எழுதிகொடுத்துள்ளார். செக்யூரிட்டியாக LIC Bond –ஐயும் கொடுத்துள்ளார். மேற்படி தொகைக்காக ரூ.50,000/–த்தை 15.04.2015ல் வரவு வைத்து மேற்படி ஆவணத்தில் வரவு குறிப்பு எழுதி கையெழுத்து செய்துள்ளார். அந்த சமயத்தில் பிரதிவாதி செக்யூரிட்டியாக கொடுத்திருந்த LIC Bond–ஐயும் திரும்ப பெற்றுக்கொண்டுவிட்டார். மீதமுள்ள தொகை ரூ.40,000/–ம் இன்னும் கொடுபடாமல் உள்ளது. பிரதிவாதி பணியிலிருந்தபோது அவரது பொறுப்பில் இருந்த தியேட்டர் ஆடிட்டோரித்திலிருந்து இறக்கி வைக்கப்பட்டிருந்த 28 மர சாத்துக்கள் மற்றும் 40 ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுக்கள் ஆகியவற்றை பிரதிவாதி வாதியின் அனுமதியின்றி எடுத்து சென்று விட்டார். அதனுடைய மதிப்பு ரூ. 26,000/– ஆகும். தொகையை வாதியிடம் கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டு 29.09.2016ல் ஒரு ஆவணமும் எழுதிகொடுத்துள்ளார். மேற்படி தொகைகளை கேட்டு வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக 25.05.2017 அன்று ஒரு சட்டஅறிவிப்பினை பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார். மேற்படி அறிவிப்பினை பெற்றுகொள்ளாமல் வேண்டுமென்றே பிரதிவாதி திருப்பி அனுப்பிவிட்டார். அறிவிப்பில் கொண்ட தொகையையும் கொடுக்கவில்லை. எனவே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

3. வாதியால் பிராதில் சொல்லப்பட்டிருக்கும் விபரங்கள் பெரும்பாலும் உண்மையல்ல. அவைகள் மறுக்கப்படுகிறது. பிரதிவாதி மேற்படி ஆனந்தி டீலக்ஸ் தியேட்டரில் செம்பனார்கோவில் மேனேஜராக பணிபுரிந்த நிலையில் தன்னால் தொடர்ந்து தியேட்டரை நடத்த முடியாத நிலையில் மேற்படி பிரதிவாதியை மேற்படி தியேட்டரை வாதி Lease-க்கு எடுத்துக்கொள்ள சொல்லி கட்டாயப்படுத்தி அதன்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:47:57 +0530

காரணமாக செக்யூரிட்டிக்காக ஒரு ஆவணத்தைப் பெற்றுக்கொண்டார். மேற்படி ஆவணம் 18.10.2011ல் எழுத்து மூலம் ஏற்பட்டது ( திரை அரங்கு கட்டிட வாடகை ஒப்பந்த பத்திரம்). மேற்படி வாடகை ஒப்பந்தப்படி பிரதிவாதி ரூ.50,000/-முன்பணம் கொடுத்து இருந்தார். அத்துடன் LIC BONDஐயும் கொடுத்து இருந்தார். பிரதிவாதி வேலை பார்த்த சமயத்தில் இருவருக்கும் மனவருத்தம் ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாக ஏதோ 02.05.2012ல் கடன் ரூ.90,000/- பெற்றது போலவும் அதற்கு ஆவணம் எழுதிக்கொடுத்தது போலவும் சொல்லியுள்ளது உண்மையல்ல. அது போர்ஜரியாக உள்ளது. மேற்படி திரை கட்டிட வாடகை ஒப்பந்தப்படி உள்ள அட்வான்ஸ் தொகை ரூ.50,000/-ம் வாதியிடம் திரும்ப பெற்றுக்கொண்டு கட்டிட வாடகை ஒப்பந்தத்தை முறித்து கொண்டுவிட்டார். பிரதிவாதி கட்டிட வாடகை ஒப்பந்தப்படி மேலும் மேற்படியாரிடம் நடத்த இஷ்டப்படாமல் இருந்ததை வைத்து மேற்படி தியேட்டர்களில் 28 மர சாத்துக்கள் மற்றும் ஆஸ்பெட் ஷீட்டுகள் அனுமதியின்றி எடுத்து சென்றுவிட்டார் என்ற கூற்று உண்மையல்ல. அப்படி எதுவும் எடுத்து செல்லவில்லை. அதை பொறுத்து வாதிக்கு பிரதிவாதி 29.09.2016ல் ஒரு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்ற கூற்று போர்ஜரியாக உள்ளது. எனவே, வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

**1) பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.90,000/— பெற்றுக்கொண்டு வாதிக்கு ஆதரவாக ஆவணம் நிறைவேற்றிக்கொடுத்தாரா?**

**2) பிரதிவாதி வாதிக்கு சொந்தமான மரச்சாத்துக்களை எடுத்துச்சென்றுள்ளாரா?**



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:48:07 +0530

**3) வாதி பிரதிவாதியிடமிருந்து தாவா தொகையை திரும்பப்பெற உரிமையுடையவரா?**

**4) தரப்பினர்களுக்கு கிடைக்கவேண்டிய இதர பரிகாரங்கள் என்ன?**

5. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 ஆக தர்மராஜன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2ன் மூலம் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலம் பி.வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**தீர்வு:–**

**இருதரப்பு வாதங்கள் :–**

6. வாதி தரப்பில் பிரதிவாதி வாதிக்கு சொந்தமான ஆனந்தி டீலக்ஸ் தியேட்டரில் மேலாளராக பணிபுரிந்தார் என்றும், பிரதிவாதி பணியிலிருந்தபோது அவரது குடும்ப செலவிற்காக வாதியிடம் ரூ.90,000/–ம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக கடந்த 02.05.2012ல் ஒரு ஆவணம் எழுதிகொடுத்ததாகவும், மேலும் செக்யூரிட்டியாக பிரதிவாதியின் LIC Bond–ஐயும் கொடுத்திருந்தார் என்றும், கடந்த 15.04.2015 பிரதிவாதி ரூ.50,000/–த்தை வாதியிடம் கொடுத்துவிட்டு மேற்படி ஆவணத்தில் வரவு குறிப்பு எழுதி கையெழுத்து செய்து அவர் செக்யூரிட்டியாக கொடுத்த LIC Bond–ஐ திரும்ப பெற்றுவிட்டார் என்றும், பாக்கி ரூ.40,000/–ம் பிரதிவாதி வாதிக்கு கொடுக்கவேண்டி உள்ளது என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது.

7. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி வாதியின் தியேட்டரில் மேனேஜராக பணிபுரிந்த நிலையில் வாதியால் தியேட்டரை தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் மேற்படி தியேட்டரை வாதி குத்தகைக்கு எடுக்கச்சொல்லி பிரதிவாதியை கட்டாயப்படுத்தி அதன் காரணமாக செக்யூரிட்டிக்காக கடந்த 18.10.2011ல் கட்டிட



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:48:15 +0530

வாடகை ஒப்பந்த பத்திரத்தை எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி வாடகை ஒப்பந்தப்படி பிரதிவாதி வாதியிடம் ரூ.50,000/—ம் முன்பணமாக கொடுத்திருந்தார் என்றும், அத்துடன் LIC Bond ஐயும் கொடுத்திருந்தார் என்றும், பிரதிவாதி வேலை பார்த்த சமயத்தில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே மனவருத்தம் ஏற்பட்டதாகவும், மேற்படி திரையரங்கு கட்டிட வாடகை ஒப்பந்தப்படி உள்ள அட்வான்ஸ் தொகை ரூ.50,000/—த்தை வாதியிடம் கொடுத்துவிட்டு மேற்படி வாடகை ஒப்பந்தத்தை முடித்துகொண்டுவிட்டதாகவும், கடந்த 02.05.2012ல் பிரதிவாதி கடன் பெற்றதாகவும், ஆவணம் எழுதிக்கொடுத்ததாகவும் சொல்வது உண்மையல்ல என்றும், அந்த ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும், பிரதிவாதி வாதிக்கு எந்த தொகையும் கொடுக்கவேண்டியது இல்லை என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது.

8. <u>இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.</u>

<u>எழுவினா 1:—</u>

9. **பிரதிவாதி வாதியிடமிருந்து ரூபாய்.90,000/— கடன் பெற்றுள்ளாரா? என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,** வாதி தரப்பில் பிரதிவாதி வாதியிடமிருந்து அவரது குடும்ப செலவிற்காக ரூ.90,000/— கடனாக பெற்றுக்கொண்டு கடந்த 02.05.2012ல் ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. அதை நிரூபிக்கும் முகமாக வாதி தரப்பில் 02.05.2012ல் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.90,000/— கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு செக்யூரிட்டிக்காக ரூ.75,000/— மதிப்புள்ள LIC Bond—ஐ கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளார். இரண்டு சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளார்கள். அதில் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள தர்மராஜன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், **"வா.சா.ஆ—1 ஆன ஆவணத்தை தான் தான் எழுதினேன் என்றும், அதில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான்"** என்றும்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:48:29 +0530

சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சி கையொப்பம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கடந்த 15.04.2015ல் வரவு குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அந்த வரவு குறிப்பில் கடந்த 15.04.2015 அன்று ரூ.50,000/– பிரதிவாதி வாதியிடம் கொடுத்துவிட்டு LIC Bond–ஐ பெற்றுக்கொண்டதாகவும், பாக்கி ரூபாய்.40,000/–த்தை பிறகு செலுத்திவிடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் வா.சா.2 சாட்சி கையொப்பம் செய்துள்ளார். அவரது சாட்சி கையொப்பம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 மற்றும் வா.சா.2ன் சாட்சியங்களை முரண்படுத்தும் வகையில் குறுக்கு விசாரணை சாட்சியம் அமையவில்லை. எனவே, பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.90,000/– கடனாக பெற்றுள்ளார் என்பதும், அதில் 15.04.2015ல் ரூ.50,000/–த்தை திருப்பி செலுத்தியுள்ளார் என்பதும், பாக்கி தொகையான ரூ.40,000/– பிரதிவாதி கொடுக்கவேண்டியுள்ளது என்பதும் தெரிய வருகிறது. பிரதிவாதி தரப்பில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும், அந்த சமயத்தில் பிரதிவாதி வாதியிடம் ரூ.50,000/– முன்பணமாக கொடுத்ததாகவும், மேலும், செக்யூரிட்டிக்காக LIC Bond ஐ கொடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

10. வாதி தரப்பில் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அதற்காக ரூ.50,000/- முன்பணம் கொடுத்தார் என்பது ஒப்புக்கொள்ளப்படவில்லை. அவ்வாறு உள்ள நிலையில் பிரதிவாதி வாதியிடம் ரூ.50,000/- முன்பணமாக கொடுத்தற்கும், அந்த பணத்தை திரும்ப பெற்றதற்குமான ஆவணங்கள் எதுவும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆன ஆவணம் மோசடியாக தயார் செய்யபட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆன ஆவணமானது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த ஆவணம் மோசடியானது என்பதை நிரூபிக்கும் சுமையானது பிரதிவாதிக்கே உள்ளது. பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என குறிப்பிட்டு மறுக்கவில்லை. மேலும், வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்பதை மெய்பிக்க கையெழுத்து நிபுணரின் அறிக்கை பெற நடவடிக்கை எதுவும் பிரதிவாதி தரப்பில்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:48:46 +0530

எடுக்கப்படவில்லை. எனவே, பிரதிவாதி எடுத்துள்ள கட்சியை அவர் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.90,000/– கடனாக பெற்றுள்ளார் என்பதும், அதில் 15.04.2015ல் ரூ.50,000/–த்தை திருப்பி செலுத்தியுள்ளார் என்பதும், பாக்கி தொகையான ரூ.40,000/– பிரதிவாதி கொடுக்கவேண்டியுள்ளது என மேற்கண்ட எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

<u>எழுவினா 2:–</u>

11. **பிரதிவாதி வாதிக்கு சொந்தமான மரச்சாத்துக்களை எடுத்துச்சென்றுள்ளாரா?** என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் பிரதிவாதி வாதியிடம் பணியிலிருந்தபோது அவரது பொறுப்பிலிருந்த தியேட்டர் ஆடிட்டோரியத்திலிருந்து 28 மரச் சாத்துக்கள் மற்றும் 40 ஆஸ்பெஸ்ட்டாஸ் ஷீட்டுக்கள் ஆகியவற்றை வாதியின் அனுமதியின்றி எடுத்துச்சென்றுவிட்டார் என்றும், அதனுடைய மதிப்பு தொகையை கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டு 29.09.2016ல் ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி எடுத்துச்சென்ற பொருட்களின் மதிப்பு ரூ.26,000/– என்றும், எனவே, பிரதிவாதி அதை கொடுக்கவேண்டும் என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி கட்டிட வாடகை ஒப்பந்தப்படி தியேட்டரை நடத்த வாதி விரும்பாததால் தியேட்டரிலிருந்து 28 மரச்சாத்துக்கள் மற்றும் ஆஸ்பெஸ்ட்டாஸ் ஷீட்டுக்களை எடுத்துசென்றதாக கூறுவது உண்மையல்ல என்றும், அதை பொறுத்து கடந்த 29.09.2016 அன்று ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் பிரதிவாதி வாதியின் தியேட்டரிலிருந்து 28 மரச்சாத்துகள் மற்றும் 40 ஆஸ்பெஸ்ட்டாஸ் ஷீட்டுக்களை வாதியின் அனுமதியின்றி எடுத்துசென்றதாகவும், அதுகுறித்து வாதி கேட்டதற்கு மேற்படி பொருட்களுக்காக ரூ.26,000/– திருப்பித்தருவதாக ஒப்புக்கொண்டு கடந்த 29.09.2016 அன்று பிரதிவாதி ஒரு ஆவணம் எழுதிகொடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், அந்த



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:48:53 +0530

ஆவணம் ஆனந்தி டீலக்ஸ் தியேட்டரின் லெட்டர் பேடில் எழுதப்பட்டுள்ளது. முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை. மேலும், 28 மரச்சாத்துக்கள் 40 ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுக்களுக்கான மதிப்புக்கு ஏற்றவாறு பணத்தை கொடுத்துவிடுவதாக மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதில் தொகை குறிப்பிடப்படவில்லை. அந்த பொருட்களுக்கான மதிப்பீட்டு சான்று வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், அந்த பொருட்களை பிரதிவாதிதான் எடுத்துச்சென்றார் என்பதை நிரூபிக்கும் விதமாக தனிநபர் சாட்சிகள் யாரும் வாதி தரப்பில் விசாரிக்கப்படவில்லை. மேலும், வா.சா.ஆ.2 ஆன ஆவணம் மட்டுமே வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணமானது முத்திரை தாளில் எழுதப்படாததால் அந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, பிரதிவாதி வாதியின் தியேட்டரிலிருந்து மரச்சாத்துக்கள் மற்றும் ஆஸ்பெஸ்ட்டாஸ் ஷீட்டுக்களை எடுத்துச்சென்றார் என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் மேற்படி எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

<u>எழுவினா 3:–</u>

12. **வாதி பிரதிவாதியிடமிருந்து தாவா தொகையை திரும்பப்பெற உரிமையுடையவரா? என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,** பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.90,000/– பெற்றுக்கொண்டு கடந்த 02.05.2012ல் வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், அந்த தொகையில் கடந்த 15.04.2015 அன்று ரூ.50,000/–த்தை திருப்பி கொடுத்துள்ளார் என்பதும், பாக்கி தொகையான ரூ.40,000/– பிரதிவாதி வாதிக்கு கொடுக்கவேண்டும் என்பதை வாதி தரப்பில் நிரூபித்துள்ளதாலும், பிரதிவாதி வாதியின் தியேட்டரிலிருந்து ரூ.26,000/– மதிப்புள்ள மரச்சாத்துக்கள் மற்றும் ஆஸ்பெஸ்ட்டாஸ் ஷீட்டுக்களை எடுத்துச்சென்றுள்ளார் என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை என எழுவினா 2ல் முடிவு காணப்பட்டிருப்பதாலும், பிரதிவாதியிடமிருந்து வாதி தாவா தொகையில் ரூ.40,000/–த்தை பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் மேற்படி எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.28 17:49:01 +0530

<u>எழுவினா 4:–</u>

13. வாதி, பிரதிவாதியிடமிருந்து தாவா தொகையில் ரூ.40,000/- பெற உரிமையுடையவர் என மேற்படி எழுவினாவில் தீர்வு காணப்பட்டிருப்பதால் இந்த வழக்கிற்கான செலவுத்தொகையை பிரதிவாதி வாதிக்கு கொடுக்கவேண்டும் என தீர்வு காணப்படுகிறது.

14. **முடிவாக,** பிரதிவாதி வாதிக்கு செலுத்தவேண்டிய ரூ. 40,000/–ஐயும், அந்த தொகைக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தீர்ப்பாணை நாள் வரை 9% வட்டியும், தீர்ப்பாணை நாள் முதல் தொகை செலுத்தப்படும் நாள் வரை 6% வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும் என இந்த வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு , அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 28.04.2026 இல் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.28 17:49:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி

<u>பின் இணைப்பு:-</u>

<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>

வா.சா.1 – செல்வராஜ்பிள்ளை (வாதி)

வா.சா.2– தர்மராஜன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 02.05.2012ல் பிரதிவாதி வாங்கிய கடனுக்கு வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் |

| | |
|---|---|
| வா.சா.ஆ.2 | 29.09.2016ல் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் |
| வா.சா.ஆ.3 | 25.05.2017ல் பிரதிவாதிக்கு வாதியின் வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறையுடன் கூடிய அறிவிப்பு |
| வா.சா.ஆ.5 | வா.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| வா.சா.ஆ.6 | வா.சா.ஆ.1ல் 15.04.2015 தேதியிட்ட வரவு குறிப்பில் உள்ள வா.சா.2 போட்ட கையொப்பம் |
| வா.சா.ஆ.7 | வா.சா.ஆ.2ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி:-</u>**

பி.வா.சா.1 – சொக்கலிங்கம் ( பிரதிவாதி)

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 29.09.2016 தேதியிட்ட பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட வா.சா.ஆ1 ஆன ஆவணத்தின் நகல் |

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.28 17:49:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி